# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1540 - 2008 මාර්තු 07 වැනි සිකුරාදා - 2008.03.07

*1540 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 220 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 224 |


**கவனிக்க** .- (i) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மாச்சு 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, பெப்புருவரி 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு

*உதவிப் பணிப்பாளர் பதவி – சமூக இடைவினை*

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி, விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் தொழில்நுட்ப அலகில் கடமையாற்றுதல் வேண்டும் என்பதுடன் அமைச்சிற்கும் மற்றும் ஏனைய விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவகத்திற்கும் அத்துடன் ஏனைய நிறுவகங்களுக்கிடையேயும் தொழில்நுட்ப மாற்றீட்டை கூட்டிணைத்தலே இவருடைய பிரதான பணியாகும். இதைவிட தெரிவுசெய்யப்பட்ட நபர் தொழில்நுட்ப மாற்றீட்டிற்கு முன்னரும் பின்னரும் "தேவை மதிப்பீடு மற்றும் தாக்க மதிப்பீடு" ஆய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பங்களாவன விளம்பரத்தில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாய் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களாவன "செயலாளர், விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு, இல. 408, காலி வீதி, கொழும்பு 3" எனும் விலாசத்திற்கு 2008.03.28 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் "உதவிப் பணிப்பாளர் பதவி – சமூக இடைவினை" என கடித உறையின் இடது பக்கத்தில் எழுதப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தபாலின் போது தொலையும் விண்ணப்பங்களுக்கு அமைச்சு எதுவித பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளாது.

**வயதெல்லை.**- 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரச சேவையில் ஏற்கனவே இருப்பவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.

**கல்வித் தகைமைகள்.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பொருளியல் அல்லது அரசியல் விஞ்ஞானம் அல்லது சமூகவியல் பாடங்களில் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு சித்தியுடன் கூடிய ஒரு விசேட பட்டம்.

**தொழில்சார்பியல் மற்றும் ஏனைய கல்வித்தகைமைகள்.**- உலகில் பயன்படுத்தப்படும் மிக நவீன சமீபத்திய தொழில்நுட்பங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய முறைகளைப் பற்றிய ஒரு விரிந்த அறிவினைக் கொண்டிருத்தல் என்பதுடன் இந்த அறிவினை கிராமிய சமூகங்களைப் பொருளாதார ரீதியாகவும் சமூக இடைவினை ரீதியாகவும் முன்னேற்றமடையச் செய்வதற்கு பிரயோகித்தல் வேண்டும் என்பதோடு இத்தகையதொரு துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால அனுபமும் கொண்டிருத்தல் வேண்டும். இத் தகைமைகளாவன சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 22,035 – 10 x 645 – ரூபா 29,385.

**ஆட்சேர்ப்பு முறை.**- பொருத்தமான மனுதாரர்கள் படிமுறை இயல்பிலான நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர். இந்த அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனம்/அலகு/பிரிவில் மேற்குறிப்பிட்ட இதே விடயத்துறையில் பணியாற்றும் அலுவலர்களின் விண்ணப்பங் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சேவை நிபந்தனைகள் :** (i) இந்தப் பதவி நிரந்தமரமானதும் ஓய்வூதியத்திற்கும் உரித்துடையதும் ஆகும்.

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் (ii) இன் பிரிவு 10 இலிருந்து 12 வரை ஏற்புடையதாகின்றது.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஆணையின்படி,

செயலாளர்,
விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சு.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சு,
இல. 408, காலி வீதி,
கொழும்பு 3.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு**

*விஞ்ஞான தொழில்நுட்ப மாற்றீடு அலகு*

***பொருளாதார, சமூக இடைவினை உதவிப் பணிப்பாளர் பதவி***

பகுதி I (விண்ணப்பதாரியினால் நிரப்பப்படல் வேண்டும்)

1. முழுப் பெயர் :-----.
2. விலாசம் :-----.
3. பிறந்த திகதி :-----.
4. விவாக நிலைமை :-----.
5. கல்வித் தகைமைகள் :-

பெற்றுக்கொள்ளப்பட்ட முதல் பட்டம் தொடர்பான விபரங்கள் :

| பட்டத்தின் பெயர், வருடம் மற்றும் பல்கலைக்கழகத்தின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |

பட்டப்பின் படிப்பு தகைமைகள் ஏதேனும் இருப்பின் அது தொடர்பான விபரங்கள் :

| பட்டப்பின் படிப்பின் டிப்ளோமாவின் பெயர், வருடம் மற்றும் நிறுவகத்தின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| | | |

6. ஏற்கனவே தொழில்புரியும் ஒருவராயின் :-----.
   (i) பதவியும் சம்பள அளவுத்திட்டமும் :-----.
   (ii) அலுவலக விலாசம் :-----.

7. தொழில்நுட்ப மாற்றீடு மற்றும் சமூக பொருளியல் இடைவினையுடன் தொடர்புடைய தொழில்சார் அனுபவம் :-----.

(i) சமூக மற்றும் பொருளியல் இடைவினையுடன் தொடர்புடைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களில் ஈடுபட்டதன் மூலம் கிடைக்கப்பட்ட அவ்வனுபவங்கள் தொடர்பான விபரங்கள் :-----.

(ii) தொழில்நுட்ப மாற்றீடு தொடர்பிலான செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடாத்துதல் தொடர்பில் ஏதேனும் அவ்வனுபவங்கள் இருப்பின் அது தொடர்பிலான விபரங்கள் : -----.

(07 (i) மற்றும் 07 (ii) தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

8. ஏற்கனவே அரச திணைக்களங்களில்/ கூட்டுத்தாபனமொன்றில் தொழில் வாய்ப்புப் பெற்றிருப்பின் அச்சேவையினை இராஜினாமாச் செய்வதற்கான காரணங்கள் :-----.

9. நீர் எப்போதாவது எக்குற்றத்தின் காரணமாகவேனும் நீதிமன்ற மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம்/இல்லை :-----.

ஆம் எனின் குற்றத்தினதும் பெற்றுக்கொள்ளப்பட்ட தண்டனையினதும் விபரம் தருக :-----.

10. ஏனைய தகைமைகள் :-----.

என்னால் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் சரியானவை எனவும் செம்மையானவை எனவும் இத்தால் உறுதியுரைக்கிறேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ........... .............................................................................................................. அமைச்சு/திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் ............................... ............................... பதவியில் கடமையாற்றுகிறார் எனவும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதும் என இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பிக்கப்பட்ட பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை இந்நிறுவனத்தின் அவரது தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என தெரிவித்துக்கொள்கிறேன்.

..................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர்
(தயவு செய்து இறப்பர்
இலாஞ்சனையைப் பொறிக்கவும்)

திகதி :-----.

3-100

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

## இலங்கை அச்சிடற் சேவை வகுப்பு III தரம் III இன் இயந்திர இயக்குநர் (Machine Minder) பதவிகள்

இலங்கை அச்சிடற் சேவையின் வகுப்பு III தரம் III இன் இயந்திர இயக்குநர் பதவிகள் தொடர்பாக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்திசெய்து 2008.04.04 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 507, இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 8" எனும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இயந்திர இயக்குநர் பதவி' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**குறிப்பு :** (அ) இப்பதவிக்கான விண்ணப்பத்தை அல்லது அது தொடர்பிலான ஆவணங்களை அரசாங்க அழுத்தகரைத் தவிர வேறு எந்த அலுவலரின் பெயருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைத்தல் ஆகாது.

(ஆ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவமோ அல்லது அது தொடர்பான ஆவணங்களோ அஞ்சல் மூலம் அனுப்பப்படும்போது தொலைந்துபோதல் அல்லது காலதாமதம் ஏற்படல் போன்ற விடயமாக செய்யப்படும் முறைப்பாடுகள் எவையும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(இ) தற்போது அரசாங்கத் திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுவோர் தத்தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/கூட்டுத் தாபன தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.- இந்த பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பளம்.-** ரூபா 14,910-10 x 170-11 x 180-6 x 240-14,320- ரூபா 24,510 ஆகும்.

3. **வயது எல்லை.-** 2008.04.04 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றுவோருக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் (பயிற்சி பெற்றோர்) :**

இயந்திர இயக்குநராக (Machine Minder) குறைந்தது 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் ;

அல்லது

கொழும்பு, தொழில்நுட்பக் கல்லூரியின் அச்சிடற் தொழில் தொடர்பான 3 வருட பாடநெறியை பயின்றபின் வழங்கப் பட்டதான சான்றிதழைக் கொண்டிருத்தல் அத்துடன் இயந்திர இயக்குநராக 5 வருட தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

5. **பதவியில் அமர்த்துதலுக்கான நிபந்தனைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

6. **பொதுவான நிபந்தனைகள்**.- தாபன விதிக்கோவையின் அத்தியாயம் 11 இன் 12.1 மற்றும் 12.6 தொடக்கம் 12.12 வரையான பிரிவுகள் ஏற்புடைத்தாகும்.

7. **சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- முறைப்படி அமைக்கப்பட்ட தெரிவுக்குழுவொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கும் செயன்முறைப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவதுடன், இதன் பெறுபேறுகளுக்கு ஏற்ப அதிக புள்ளிகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள்/ பரீட்சார்த்திகள் வெற்றிடங்களுக்கு அமைய சேர்த்துக்கொள்ளப்படுவர்.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் கோரப்படுகின்றது.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
அஞ்சல் பெட்டி 507,
118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,
கொழும்பு 8,
2008.02.19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

இலங்கை அச்சிடற் சேவையின் வகுப்பு III தரம் III இன் இயந்திர இயக்குநர் (Machine Minder) பதவி

1. (அ) முழுப் பெயர் :----.

 (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (அ) அஞ்சல் முகவரி :----.

 (ஆ) நிரந்தர முகவரி :----.

3. மாவட்டம் :----.

4. (அ) பிறந்த திகதி :-
 ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

 (ஆ) 2008.04.04 ஆந் திகதியன்று வயது :-
 ---- வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள்

5. நீர் இலங்கைப் பிரசையா ? :----.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :----.

7. தொழிற் தகைமைகள் :----.
 (சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.)

8. தற்போது புரியும் தொழில் :----.
 (தொழில்தருநரின் பெயர், முகவரியுடன்)

9. இந்த துறை தொடர்பாக பெற்றுள்ள அனுபவம் :

| பதவிகள் | சேவைக்காலம் | |
|---|---|---|
| | தொடக்கம் | வரை |
| -------------------------- | ------------ | ------------ |
| -------------------------- | ------------ | ------------ |
| -------------------------- | ------------ | ------------ |

10. ஏதாவது குற்றச்செயல் தொடர்பாக நீதிமன்றத்தினால் இதற்கு முன்னர் குற்றவாளியாக கருதப்பட்டிருந்தீரா ? :----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவையென்றும், பிழையற்றவையென்றும் நான் உறுதிமொழிகின்றேன். இதிலே அடங்கியுள்ள ஏதேனும் விடயங்கள் பொய்யானவையென்றோ, பிழையானவையென்றோ தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு ஏதுமின்றி சேவையினின்றும் நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவரின் சான்றிதழ்**

(விண்ணப்பதாரி, அரசாங்க திணைக்களத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவரெனின் உரிய திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.)

.......................................... என்பவர் இந்த திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவர் என்றும், இவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானது என்றும், இப்பதவி தொடர்பான அறிவித்தலில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார் என்றும், இப்பதவியின் பொருட்டு இவர் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சேவையினின்றும் விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் சான்றளிக்கின்றேன்.

----,
திணைக்களத்/கூட்டுத்தாபனத் தலைவரின்/
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

3-115

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2008, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2008, பெப்புருவரி 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. கம்பஹா | வத்தளை | மத்துமகல பிரதேச பிறப்பு, இறப்பு அலுத்குறு கோறளை தெற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 2. கம்பஹா | மினுவங்கொடை | உடுகம்பொல பிரிவு பிறப்பு, இறப்பு அலுத்குறு கோறளை வடக்கு பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 3. கம்பஹா | ஜா-எல | தண்டுகம பிரிவு பிறப்பு, இறப்பு அலுத்குறு கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 4. கம்பஹா | மஹர | தளுபிடிய சியான கோறளை மேற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 5. கம்பஹா | மீரிகம | யடிஹக தெற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு ஹாபிடிகம கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 6. கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகர (வைத்தியசாலை) பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 7. கம்பஹா | ஜா-எல | கந்தான பிரிவு பிறப்பு, இறப்பு அலுத்குறு கோறளை தெற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 8. கம்பஹா | பியகம | சியான கோறளை மேற்கு பிரிவின் மிஹகவத்தை பிரதேச மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 9. கம்பஹா | அத்தனகல்ல | சியான கோறளை மேற்கு பெம்முல்ல மற்றும் மகலேகொட பிரதேச மேலதிக விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 10. கம்பஹா | கம்பஹா | சியான கோறளை மேற்கு அலுத்கம, போகமுவ பிரதேச பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |
| 11. கம்பஹா | மஹர | மஹர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் சியான கோறளை மேற்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம் , கம்பஹா. |

3–139

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணினித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும் – 2007 (1)

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவான ஒரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சை மற்றும் கணனித் திறனை அளவிடும் எழுத்துப் பரீட்சை என்பன 2008 யூலை மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சை உரியதாகும் விண்ணப்பதாரர்களைப் பற்றி 1372/23 ஆம் இலக்க 2004.12.24 ஆந் தேதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் 5 ஆம் மற்றும் 9 ஆம் பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ளன. 2004.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இணைந்த சேவையின் பதவியொன்றுக்கு நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் அச்சேவைக்கு உரிய தகைமைகளைப்

பூர்த்தி செய்த பின்னர் குறித்த சேவையினது சேவைப் பிரமாணத்தின்படி சேவையை நிரந்தரப்படுத்த வேண்டும். 2004.01.01 ஆந் திகதிக்கு பின்னரான நியமனமொன்றில் பதவி ஏற்றுக்கொண்ட அலுவலர் ஒருவருக்கு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் ஏற்பாடுகள் முழுமையாகவே ஏற்புடையதாகும்.

3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப் பரீட்சையானது, கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனும் நிலையங்களுக்காக போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாவிட்டால் அந் நிலையம் இரத்துச் செய்யப்படும்.

4. (i) இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குகள் விதிகள் என்பனவற்றுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் வர்த்தமானப் பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவர்.

5. விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம் மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2008, ஏப்பிறல் 7 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்களை இட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னனராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

7. **விண்ணப்பப்பத்திரங்கள்**.- விண்ணப்பப்பத்திரங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் இலக்கம் 3.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்தில் அமைதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இத்துடன் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்தல் வேண்டுமென்பதுடன ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்புதலாகாது.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கு அல்லது இரண்டு பாடங்களுக்குத் தோற்றுவதாயின் ரூபா 90

பெறுமதியான முத்திரைகளையும் ஒரு பாடத்திற்காக தோற்றுவதாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும் விண்ணப்பத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக் காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எவரேனும் அலுவலர் ஒருவருக்கு பரீட்சை திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடையாவிடின், அனுமதி அட்டை கிடையாமை பற்றி பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தந்தி முகவரி : "பரீட்சை" பத்தரமுல்லை)

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் திகதி.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

10. தொடர்புடைய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலோ அல்லது அரச கரும மொழியொன்றிலோ அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

11. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கு உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய ஓர் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் :-

| பாடம் | பாட இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் | 01 | 100 | 1 மணித்தியாலம் |
| 2. கணக்கீட்டு முறைமைகள் | 02 | 100 | 1 மணித்தியாலம் |
| 3. கணனிப் பரீட்சை | 03 | 100 | 1 1/2 மணித்தியாலம் |

13.1 அலுவலக முறைமைகள்.- அரச அலுவலகங்களில் கையாளப்படுகின்ற அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படை அறிவும், அவ் அறிவினை செய்முறையாக பயன்படுத்தும் திறனும், கடமையுடன் தொடர்புடைய ஆவணங்களை நன்கு புரிந்துகொண்டு தெளிவாக சுருங்கிய குறிப்புகளின் மூலம் தமது கருத்துக்களை/ஆய்வுகளை சமர்ப்பிக்கும் ஆற்றலும் விதிக்கப்பட்ட கட்டளையின் கீழ் கடிதமொன்றை வரைவுபடுத்தும் திறனும் சோதிக்கப்படும். இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – குறுகிய விடைகளை எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும் வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – கட்டுரை அமைவு முறையிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.2 கணக்கீட்டு முறைமைகள்.- அரச அலுவலகங்களில் கையாளப்பட்டு வருகின்ற ஆரம்ப கணக்குகள் மற்றும் கணக்கு கட்டுப்பாட்டுப் புத்தகங்களின் செயற்பாடு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் அளவிட இதனால் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்திருக்கும்.

பகுதி I – குறுகிய விடைகளை எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். வினாத்தாளிலேயே விடை அளித்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

பகுதி II – கட்டுரை அமைவு முறையிலான வினாத்தாளாகும். நான்கு வினாக்களில் மூன்றுக்கு விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

13.3 கணினிப் பரீட்சை பரீட்சார்த்தி பின்வரும் ஆற்றல்களைக் கொண்டுள்ளாரா என சோதிப்பது இப் பரீட்சையின் நோக்கமாகும் :-

***தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை***
***எண்ணக்கருக்கள்***
***'வின்டோஸ்'' இயக்க முறைமை***
***கோப்பு முறை***

| | | |
|---|---|---|
| சொல் முறை வழிப்படுத்தல் | - | அடிப்படைத் திறமைகள், திரைக்கு பழக்கப்படல், பாடப்பதிப்பு பாடங்களை நேர்ப்படுத்தல், எழுத்துரு வகையும் பண்புகளும், பந்தி உள்தள்ளல், வரி வெளிகள் மாற்றுதல்<br>தத்தல் அமைப்பு, பாடத்தைக் கண்டுபிடித்தலும் மாற்றிடுதலும் இலக்கணம் தேசோரஸ்<br>நிரல்கள், பக்க அமைவு செயற்பாடுகள்<br>ஆவணங்களை அச்சிடல், அட்டவணைகள் தயாரித்தல், பாடத்தை வரிசைப்படுத்தல்<br>கோப்பு முகாமை<br>அஞ்சல் இணைப்பு<br>மக்ரோ தொழிற்பாடு |
| விரிதாள் | - | அடிப்படைத் திறமைகள்<br>வடிவமைத்தல்<br>பதிப்பித்தல்<br>நிரல்களும் வீச்சும், செருகுதல், நீக்குதல் தகவல்களை வரிசைப்படுத்தல்<br>வரைபடங்களைப் படைத்தல்<br>அச்சிடல்<br>@ பயன்பாடு<br>மக்ரோக்களுடன் பணியாற்றல், கோப்பு முகாமை |
| தரவுத்தளங்கள் | - | அறிமுக, அடிப்படைத் திறமை<br>தரவுத்தளங்கள் உருவாக்கலும் பிரயோகமும்<br>படிவங்கள்<br>இணைப்புப் படிவங்கள், மேல்வரும் படிவங்கள், உரையாடல், தகவல் பெட்டிகள்<br>வினாக்கள்<br>வரிசைப்படுத்தல்<br>அறிக்கைகள்<br>மக்றோக்களுடன் பணி செய்தல் |
| நிகழ்த்துக்காட்சி/வரைகலை | - | அடிப்படைத் திறமைகள், பதிப்பித்தல், வடிவமைத்தல்<br>வடிவமைப்பு பிரயோகித்தல், படிவங்களை செருகுதல், ஆயத்தப்படங்களும், வரைபடங்களும்<br>படவில்லை காட்சிகளும், விளைவு அசைவூட்டலும்<br>நிகழ்த்துக் காட்சி கருவிகளைப் பயன்படுத்தல், முதன்மை களைத் தயாரித்தல், படவில்லைகள் குறிப்புகள் அச்சிடல் |
| இணையம் | - | இணையத்தை அறிமுகப்படுத்தல், உலகளாவிய வலையமைப்பு, எவ்வாறு வழிகண்டறிதல் இணையச் செயல்முறை |
| மின்னஞ்சல் | - | அறிமுகம், அடிப்படைத்திறமைகள், அஞ்சல்களைப் பெறுதல் அனுப்புதல், பதிலளித்தல் |
| | - | இணைப்புகளுடன் செயலாற்றல், புனைப் பெயர்களை உருவாக்கி பயன்படுத்தல், தகவல்களை இயற்றுதல் |

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது :-

பகுதி I – பல்விருப்பு/சுருக்கமான பதில்கள் எதிர்பார்க்கப்படும் 40 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும்.
காலம் : 45 நிமிடங்கள் - (40 புள்ளிகள்)

பகுதி II – பகுதி அமைவு ரீதியிலான 5 வினாக்கள் - காலம் : 45 நிமிடங்கள் - (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணத்தின் பந்தி 5:1:2 இன்படி தேசிய பயிலுநர் தொழிநுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் அளிக்கப்படுகின்ற கணினி நடவடிக்கை உத்தரவுச் சீட்டு அல்லது கணினி நடவடிக்கை உத்தரவுச் சீட்டுக்கு சமமான அல்லது அதைப் பார்க்க உயர்மட்ட தரத்தைக் கொண்டுள்ள மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதன் I ஆம் அட்டவணையில் காட்டப்படுகின்ற நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட கணினி சான்றிதழ்களைப் பெற்றுள்ள அலுவலர்கள் இக் கணினி பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவர்.

14. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

ஏ. நோபேட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2008 பெப்புருவரி 19.

**அட்டவணை I**

**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்ற அங்கீகரிக்கப்படும் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணனி சான்றிதழ்கள் தொடர்பான அட்டவணை**

| *Serial No.* | *Name of Institute* | *Address of Institute* | *Course* |
|---|---|---|---|
| 1. | National Apprentice and Industrial Training Authority | Sri Jayawardanapura Road, Welikada, Rajagiriya | Computer Graphic Designer |
| 2. | Apprentice Training Institute | No. 85, Galle Road, Katubedda, Moratuwa | Computer Application Assistant |
| 3. | National Youth Service Council | No. 65, High Level Road, Maharagama | Computer Application Assistant |
| 4. | District Vocational Training Institute | Galigamuwa Town, Ballapana | Computer Application Assistant |
| 5. | National Vocational Training Institute | No. 354, Elvitigala Mawatha, Narahenpita | Computer Application Assistant |
| 6. | District Vocational Training Centre | Saragama, Kurunegala | Computer Application Assistant |

| *Serial No.* | *Name of Institute* | *Address of Institute* | *Course* |
|---|---|---|---|
| 7. | National Vocational Training Institute | No. 100, Kandawala Road, Ratmalana | Computer Application Assistant |
| 8. | National Youth Service Council | No. 65, High Level Road, Maharagama | Computer Hardware Technician |
| 9. | Vocational Training Centre National Youth Service Council Centre | Pallidora Road, Kawdana, Dehiwala | Computer Application Assistant |
| 10. | National Apprentice and Industrial Training Authority | Negombo Road, Kurunegala | Computer Application Assistant |
| 11. | Telecommunication and Computer Training Centre | Beruwala | Computer Hardware Technician |
| 12. | North Central Office (NAITA) | No. 525, Maithiripala Senanayake Mawatha, Ratnayakepura, Anuradhapura | Computer Application Assistant |
| 13. | Pannipitiya Rural Vocational Training Centre | Waskaduwa, Panapitiya | Desktop Publishing |
| 14. | Rural Vocational Training Centre | Mudukatuwa | Computer Application Assistant |
| 15. | Youn Niketanaya National Youth Service Council | Anuradhapura | Computer Application Assistant |
| 16. | Computer Education Centre | Sri Dharmarama Mawatha, Colombo 06 | Computer Application Assistant |
| 17. | Sri Lanka Nippon Rural Vocational Training Centre | Mahindarama Road, Ethul Kotte, Kotte | Computer Application Assistant |
| 18. | Lalith Athulathmudali Vocational Training Centre | Station road, Ratmalana | Computer Hardware Technician |
| 19. | Computer Education Centre | Divisional Secretariat Office, Anguruwathota, Madurawela | Computer Application Assistant |
| 20. | Vocational Training Centre National Youth Service Council Centre | Pallidora Road, Kawdana, Dehiwala | Computer Graphic Designer |
| 21. | Technical College | Werellawatta, Yakkala, Gampaha | Computer Application Assistant |
| 22. | Institute of Professional Computer Studies | 178A, Colombo Road, Ratnapura | Computer Application Assistant |
| 23. | Institute of Professional Computer Studies | 178A, Colombo Road, Ratnapura | Computer Graphic Designer |
| 24. | Technology and Computer Training Institute | No. 15, 1/1, Piyadasa Sirisena Mawatha, Maradana, Colombo 10 | Computer Graphic Designer |

| *Serial No.* | *Name of Institute* | *Address of Institute* | *Course* |
|---|---|---|---|
| 25. | Technology and Computer Training Institute | No. 15, 1/1, Piyadasa Sirisena Mawatha, Maradana, Colombo 10 | Computer Application Assistant |
| 26. | Cholankanda Youth Training Centre | Udahenthanna, S. P. O. 20506, Via Gampola | Computer Application Assistant |
| 27. | Institute of Professional Computer Studies | 178A, Colombo Road, Ratnapura | Computer Hardware Technician |

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணனித் திறமையைச் சோதிக்கும் எழுத்துப் பரீட்சையும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையும்-2007 (1)**

Efficiency Bar Examination and the Written Test on Computer Skills for Officers in Class III of Public Management Assistants' Service - 2007 (I)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும்.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.
இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) உதா : Mr. SILVA A. B)

1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 பிரவேச அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெபிற்றல் எழுத்தில்)

3.

3.1 பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐

4. தற்போது வகிக்கும் பதவி -

4.1 பதவி :----.
4.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

5. நீங்கள் தற்போது தோற்ற உள்ள பாடம்/பாடங்கள் :-
(வர்த்தமானப் பத்திரிகையின் பந்தி 13.0 ஐப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

6.

6.1 நீங்கள் பரீட்சைக்கு முதன்முதலாக தோற்றுகின்றீர்களா ? :----.
6.2 பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை அல்லாது இருப்பின் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.
6.3 முத்திரைக் கூடு :

| |
|---|
| முழுப் பரீட்சைக்காக அல்லது இரண்டு பாடங்களுக்கு ரூபா 90 பெறுமதியான முத்திரைகளையும் ஒரு பாடமாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரைகளையும் இங்கு ஒட்டிவிடவும். |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றைப் பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரைகள் ஒன்றன் மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், இத்தால் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ................................ பெறுமதியான முத்திரைகள் பாவிக்கப்படாத செல்லுபடியானவை என சான்றுப்படுத்துகின்றேன். இப்பரீட்சை தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக நான் உடன்படுகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

**கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்தவருமான திரு./திருமதி/செல்வி ...................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை சான்றுப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் ;
2. இவ் அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் தோற்றினார்*/தோற்றவில்லை என்றும் ;
3. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்கு தோற்றியிருப்பதனால் உரிய பெறுமதியுடைய முத்திரை இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் ;
4. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

*தேவையற்றவைகளைக் கீறிவிடவும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

3-131

---

**மறியற்சாலைகள் திணைக்களம்**

மறியற்சாலைக் காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2008

மறியற்சாலைகள் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள மறியற்சாலைக் காவலாளர் மற்றும் பெண் காவலாளர் பதவிகளுக்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மீதும் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் மீதும் கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

3. வெற்றிடங்களின் ஒரு பகுதியையோ அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு தத்துவம் உள்ளது. உளதாம் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 95& வெளிவாரி விண்ணப்பதாரர்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், 5& உள்ளக விண்ணப்பதாரர்கள் பதவி உயர்வு செய்யப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படும். 82 (எண்பத்திரண்டு) பெண் காவலாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.- பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 (iv) இன்படி காவலாளர் பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் மாதாந்தம் ரூபா 14,280-7 x 145-10 x 180-17 x 240-ரூபா 21,175 ஆகும். முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை நியமனம் பெற்ற மூன்று வருட காலத்துக்குள்ளும் இரண்டாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நியமனம் பெற்று ஆறு வருட காலத்துக்குள்ளும் சித்தியடைதல் வேண்டும். 15,475 ரூபாவுக்கு அப்பால் செல்வதற்காக மறியற்சாலை ஓவர்சியர் பதவிக்கு பதவி உயர்வு பெறுதல் வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவை/தபுதாரர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு நிதி செலுத்துதல் வேண்டும்.

6. **தகைமைகள் :**

*__கல்வி__.- இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் எந்தவோர் இரு பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.)

***தொழில் மற்றும் பிற தகைமைகள் :**

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.) மறியற்சாலைக் காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் மறியற்சாலைகள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பிரம்மச்சார விடுதிகளில் ஆகக்குறைந்தது 05 வருட காலம் தங்கியிருந்து சேவை செய்ய வேண்டும்.

(3) விண்ணப்பகாரர்கள் நல்லொழுக்கமுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஏதேனுமொரு தவறு தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் தவறாளராக்கப் பட்டிருப்பது பதவியில் நியமனத்துக்கான முழுமையான தகுதியற்ற நிலையாகும்.

(4) ஆகக்குறைந்த உயரம் 5 அடி 4 அங்குலம் (ஆண்) ; ஆகக்குறைந்த உயரம் 5 அடி 2 அங்குலம் (பெண்).

(5) ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மார்பு மூச்செடுக்காமல் 32 அங்குலமாக இருத்தல் வேண்டும்.

*7. **பரீட்சை முறை**.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது :*

| | *புள்ளிகள்* | *காலம்* |
|---|---|---|
| * நுண்ணறிவுப் பரீட்சை | *100* | *1 மணித்தியாலம்* |
| * பொது அறிவு | *100* | *1 மணித்தியாலம்* |

சிறந்த தேகாரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (இராணுவ சேவைக்குச் சமமான உட்சேவைப் பயிற்சியொன்று தெரிவுசெய்யப்படும் அலுவலர்களுக்கு கட்டாயமாக பெற்றுக்கொடுக்கப்படும்).

***பாடத்திட்டம் :***

* நுண்ணறிவுப் பரீட்சை – காலம் : 1 மணித்தியாலம் – மொத்தப் புள்ளிகள் 100.

இப்பரீட்சை வாதப் பொருத்தமுடைய பகுப்பாய்வு செய்து தீர்மானமெடுக்கும் விண்ணப்பதாரர்களின் ஆற்றலை அளவிடும். இவ்வினாத்தாள் பல்தெரிவு வினாக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

* பொது அறிவு — காலம் : ஒரு மணித்தியாலம் – மொத்தப் புள்ளிகள் 100.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள், தகவல் தொழினுட்பம், பரீட்சார்த்தி வதியும் சூழல் உட்பட இலங்கையின் அரசியல் சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியமாகின்ற விடயங்கள் அத்துடன் விஞ்ஞான மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக அவரது அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக தயார்செய்யப்பட்ட பொது வினாத்தாள் ஆகும். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

***தெரிவு நடவடிக்கை முறை***.- ஒரு பாடத்தில் தகைமை பெறுவதற்காக 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெறுதல் வேண்டும். இப்பரீட்சையில் தகைமை பெறுபவர்களில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்று உட்படுத்தப்படுவர். (எழுத்துமூல பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.)

எழுத்துமூலப் பரீட்சையில் மற்றும் அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் நியமனங்களை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் அந்தந்த பரீட்சார்த்திகளுக்கு வெவ்வேறாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுவது அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சைகள் முடிந்த பின்னரே ஆகும். பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் உளதாம் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்கிற்கு சமமான பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதன்படி பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்காக தகைமைகளைப் பெறும் அபேட்சகர்கள் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளை உள்ளடக்காது அவர்களின் பெயர்கள் மாத்திரமே அகராதி முறையில் உள்ளடக்கி வெவ்வேறாக தயார்செய்யப்பட்ட இரு அட்டவணைகள் நேர்முகப் பரீட்சை நடவடிக்கைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*8. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**.-* விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பும்பொழுது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களின்படி பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவரென தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவரால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் பொய்யானவை எனத் தெரியவருமிடத்து அவரை அரசாங்க சேவையிலிருந்து விலக்கிவிட முடியும்.

*9. **பரீட்சைக் கட்டணங்கள்**.-* பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும். இத்தொகை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 4000-20-03-20-13 வருமானத் தலைப்பின்கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்ட செயலகத்திலும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் சம்பந்தப்பட்ட இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை எதிர்கால பயனுக்காக தன்வசம் வைத்துக்கொள்ள வேண்டும்) எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் திரும்பச் செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. விண்ணப்பங்கள், A4 (21 x 29 செ. மீ.) (சாதாரண ஹாவ் ஷீட்) அளவிலான கடதாசிகளை உபயோகித்து-

(அ) இல. 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இல. 04 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கங்களிலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்பத்திரத்தைத் தயார்செய்து கொள்ள வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்திற்கமைவாக இல்லாத, உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்படாத மற்றும் பூரணமற்ற நிலையில் உள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யாத காரணத்தால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார்.

10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்னும் ஊகத்துடன் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதி அட்டையொன்றை வழங்குவது விண்ணப்பதாரர் இப்பதவிக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்வதற்காக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலின்படி தகைமைகள் உள்ளனவா என பரீட்சித்துப் பார்க்கும்போது தேவையான தகைமைகள் இல்லை என தெரியவருமிடத்து அவரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படும்.

10.2 விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''மறியற்சாலைகள் காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை — 2008'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

10.3 விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் (பரீட்சார்த்தியின்) கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கின்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 1,24,080 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தைப் பெறுகின்ற ஆண்டு சம்பள உயர்வு 1,560 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்க நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அல்லது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்த வேண்டும்.

10.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தை 2008.04.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.

11. **பரீட்சையில் தோற்றுதல்.**- பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும். அதுபற்றிய அறிவித்தலொன்று புதினப் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன், அதுபற்றி விண்ணப்பதாரர்கள் அவதானிப்புடன் இருத்தல் வேண்டும். அதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத அபேட்சகர்கள் பின்வரும் விபரங்களுடன் அதைப்பற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் தொடர்புகொள்ள வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) தெரிவுசெய்த நகரம் ;
(iii) விண்ணப்பத்தின் பதிவு இலக்கம் ;
(iv) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம், திகதி மற்றும் அலுவலகம்.

12. பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

14. இங்கே குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அதுபற்றி மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவு செய்யப்படும். எல்லா விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள பொதுப் பரீட்சை விதிகளுக்கமைய செயல்படுவதற்கு கடப்பாடுடையவர்களாவர்.

வஜிர விஜயகுணவர்தன,
ஆர். எஸ். பீ., யூ. எஸ். பீ., எல். டீ. எம். சீ,
மேஜர் ஜெனரல்,
மறியற்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

மறியற்சாலைகள் தலைமையகம்,
கொழும்பு 09,
2008.02.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மறியற்சாலை காவலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை – 2008**

(தரப்பட்டுள்ள கூடுகளினுள் சரியான குறியீட்டை/இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடவும்.)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சையில் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் – 2
தமிழ் – 3 [ ]
ஆங்கிலம் – 4

(சம்பந்தப்பட்ட இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரத்தை குறிப்பிடவும். (பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களுக்காக 1 ஆம் அட்டவணையைப் பார்க்கவும்.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

1. பெயர் :-

(i) முதலெழுத்துக்களுடன் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ-ம் PERERA A. B. C

(ii) முழுப்பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(iii) முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

(iv) தேசிய அடையாள அட்டை இல. :
[ | | | | | | | | | ]

2. (i) நிரந்தர முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(ii) (சிங்களத்தில்/தமிழில்) :----.

(iii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3. (i) பால் :

(பெண் – 1, ஆண் – 0) [ ]

(ii) பிறந்த திகதி :-

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று வயது :-

வருடங்கள் : ☐☐☐☐

மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(iv) விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

விவாகமானவர் 1 ☐
விவாகமாகாதவர் 2

4. (i) மாவட்டத்தில் வதியும் காலம் :----.

(ii) உதவி அரசாங்க அதிபர்/பிரதேச செயலாளர் பிரிவு :----.

(iii) பொலிஸ் பிரிவு :----.

(iv) உயரம் :- அடி ----. அங்குலம் ----.

(v) மார்பு :- அங்குலம் ----.

5. கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கான விபரங்கள் :

(i) பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

6. நீவிர் எப்போதாவது ஏதேனுமொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

சம்பந்தப்பட்ட கூட்டினுள் "✓" அடையாளத்தை இடுக.
(ஆமெனில் விபரங்களைத் தருக) :----.

7. பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்திய பற்றுச்சீட்டு விபரம் :

(i) பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்திய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்தப்பட்ட தொகை :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சில பகுதிகளைப் பூர்த்திசெய்யாது மற்றும்/அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாது மற்றும்/ அல்லது பிழையாக பூர்த்திசெய்யாது ஏற்படுகின்ற நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது என நிரூபிக்கப்பட்டால் நியமனத்திற்கு முன்னர் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்திற்குப் பின்னர் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்றும் நானறிவேன்.

(இ) பரீட்சையின் எல்லா நிபந்தனைகளுடனும் இணங்கியொழுகுகிறேன்.

(ஈ) இதில் குறிப்பிட்ட எத்தகவலையும் பின்னர் மாற்றஞ்செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அட்டவணை 1**

**பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் நகரங்கள்**

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 1. கொழும்பு | கொட்டாஞ்சேனை | 01 |
| | மருதானை | 02 |
| | பொறளை | 03 |
| | குருந்துவத்த | 04 |
| | பம்பலபிட்டி | 05 |
| | ஹெவ்லக் டவுண் | 06 |
| | நுகேகொடை | 07 |
| | மொறட்டுவை | 08 |
| | பிலியந்தலை | 09 |
| | ஹோமாகம | 10 |
| | மஹரகம | 11 |
| | ஹங்வெல்ல | 12 |
| | அவிசாவளை | 13 |
| 2. கம்பஹ | நீர்கொழும்பு | 14 |
| | மினுவங்கொடை | 15 |
| | திவுலபிட்டி | 16 |
| | வெயாங்கொடை | 17 |
| | கம்பஹ | 18 |
| | ஜா-எல | 19 |
| | வத்தளை | 20 |
| | களனி | 21 |
| | தொம்பே | 22 |

| | மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| 3. | களுத்துறை | ஹொறணை | 23 |
| | | பாணந்துறை | 24 |
| | | களுத்துறை | 25 |
| | | மதுகம | 26 |
| | | அளுத்கம | 27 |
| 4. | மாத்தளை | மாத்தளை | 28 |
| | | கலேவெல | 29 |
| | | நாஉல | 30 |
| | | லக்கல-பல்லேகம | 31 |
| 5. | கண்டி | கண்டி | 32 |
| | | கட்டுகஸ்தோட்டை | 33 |
| | | தெல்தெனிய | 34 |
| | | வத்தேகம | 35 |
| | | நுகவெல்ல | 36 |
| | | கலகெதர | 37 |
| | | கம்பொளை | 38 |
| 6. | நுவரெலியா | ஹந்துனுவெவ | 39 |
| | | நுவரெலியா | 40 |
| | | வதுமுல்ல | 41 |
| | | ஹட்டன் | 42 |
| | | கினிகத்ஹேன | 43 |
| 7. | காலி | அம்பலான்கொட | 44 |
| | | காலி | 45 |
| | | பத்தேகம | 46 |
| 8. | மாத்தறை | வெலிகம | 47 |
| | | மாத்தறை | 48 |
| | | கம்புறுபிட்டிய | 49 |
| | | ஹக்மன | 50 |
| | | தெய்யந்தர | 51 |
| | | திக்வெல்லை | 52 |
| | | அக்குறணை | 53 |
| | | கொட்டபொல | 54 |
| 9. | அம்பாந்தோட்டை | பெலிஅத்த | 55 |
| | | வலஸ்முல்ல | 56 |
| | | வீரகெட்டிய | 57 |
| | | தங்காலை | 58 |
| | | அம்பலாந்தோட்டை | 59 |
| | | அம்பாந்தோட்டை | 60 |
| | | திஸ்ஸமகாராமய | 61 |
| 10. | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | 62 |
| | | யாழ்ப்பாணம் | 63 |
| | | தெல்லிப்பளை | 64 |
| | | பருத்தித்துறை | 65 |
| 11. | மன்னார் | மன்னார் | 66 |
| | | முருங்கன் | 67 |
| 12. | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 68 |
| 13. | வவுனியா | வவுனியா | 69 |
| 14. | திருகோணமலை | கந்தளாய் | 70 |
| | | திருகோணமலை | 71 |
| | | மூதூர் | 72 |
| | | பதவி பராக்கிரமபுரம் | 73 |
| | | கிண்ணியா | 74 |
| 15. | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 75 |
| | | ஏறாவூர் | 76 |
| | | காத்தான்குடி | 77 |
| 16. | அம்பாறை | அம்பாறை | 78 |
| | | சேரங்கட | 79 |
| | | கல்முனை | 80 |
| | | அக்கரைப்பற்று | 81 |
| | | சம்மாந்துறை | 82 |
| 17. | புத்தளம் | வென்னப்புவ | 83 |
| | | மாதம்பை | 84 |
| | | சிலாபம் | 85 |
| | | புத்தளம் | 86 |
| 18. | குருநாகல் | குளியாப்பிட்டி | 87 |
| | | பிங்கிரிய | 88 |
| | | நாரம்மல | 89 |
| | | பொல்கஹவெல | 90 |
| | | குருநாகல் | 91 |
| | | இப்பாகமுவ | 92 |
| | | தொடம்பஸ்லந்த | 93 |
| | | மொறந்திஹ | 94 |
| | | நிக்கவரட்டிய | 95 |
| | | மஹவ | 96 |
| 19. | அநுராதபுரம் | மதவாச்சி | 97 |
| | | கெக்கிராவ | 98 |
| | | அநுராதபுரம் | 99 |
| | | கலென்பிந்துனுவெவ | 100 |
| | | கஹட்டகஸ்திகிலிய | 101 |
| 20. | பொலனறுவை | பொலனறுவை | 102 |
| | | ஹங்குரன்கொட | 103 |
| 21. | பதுளை | பண்டாரவளை | 104 |
| | | வெலிமடை | 105 |
| | | பதுளை | 106 |
| | | பசறை | 107 |
| | | மஹியங்கனை | 108 |
| | | கிராந்துறு கோட்டை | 109 |
| | | ஹசலக | 110 |
| 22. | மொணறாகலை | பிபில | 111 |
| | | மொணறாகலை | 112 |
| | | வெல்லவாய | 113 |
| 23. | கேகாலை | கேகாலை | 114 |
| | | றம்புக்கணை | 115 |
| | | மாவனல்லை | 116 |
| | | ருவன்வெல்ல | 117 |

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| 24. இரத்தினபுரி | எஹெலியகொட | 118 |
| | இரத்தினபுரி | 119 |
| | பெல்மடுல்ல | 120 |
| | பலாங்கொடை | 121 |
| | கலவானை | 122 |
| | எம்பிலிப்பிட்டி | 123 |
| 25. கிளிநொச்சி | கிளிநொச்சி | 124 |
| | பளை | 125 |

3-281

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளிமிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் IV பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 3,360.00 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை-2008**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 07.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.02.2008 |
| | | வெள்ளி | 14.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.02.2008 |
| | | புதன் | 19.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.03.2008 |
| | | வெள்ளி | 28.03.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.03.2008 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 04.04.2008 | .. | நண்பகல் 12 | புதன் | 19.03.2008 |
| | | வெள்ளி | 11.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.03.2008 |
| | | வெள்ளி | 18.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.04.2008 |
| | | வெள்ளி | 25.04.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.04.2008 |
| **மே** | .. | வெள்ளி | 02.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.04.2008 |
| | | வெள்ளி | 09.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.04.2008 |
| | | வெள்ளி | 16.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.05.2008 |
| | | வெள்ளி | 23.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.05.2008 |
| | | வெள்ளி | 30.05.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.05.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*